செய்தி வெளியீடு எண். **316** நாள்: **29.04.2008**

## பால்வளத்துறை மற்றும் ஆவின் ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்

முந்தைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் நேரடி நியமனங்களுக்கு **29.11.2001** முதல் ஒட்டு மொத்த தடை விதிக்கப்பட்டிருந்தது. அரசு பணியின்போது இயற்கை எய்திய அரசு பணியாளர்களின் பணியிடங்களில் வாரிசுதாரர்களை கருணை அடிப்படையில் நியமனம் செய்வதும் தடை செய்யப்பட்டது. இதன் காரணமாக பணியிடை காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்கள் பணி நியமனம் கிடைக்காமல் துன்புற்றனர்.

திராவிட முன்னேற்ற கழக அரசு மீண்டும் பதவியேற்ற பின்னர் அரசுப் பணியில் நேரடி நியமனத்திற்கு இருந்த தடை நீக்கப்பட்டது. கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கு இருந்த தடையும் நீக்கப்பட்டது.

பால்வளத் துறையில் காலியாக இருந்து வந்த அனைத்து பணியிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் 26.4.2007 மற்றும் 10.10.2007 ஆகிய தேதிகளில் நடைபெற்ற விழாக்களில் ஆவின் நிறுவன ஊழியர்களின் 42 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன உத்தரவுகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்களால் நேரில் வழங்கப்பட்டன.

மேலும் 26.06.2007 மற்றும் 22.08.2007 ஆகிய தேதிகளில் நடைபெற்ற விழாக்களில் 34 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன உத்தரவுகள் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் நேரில் வழங்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக பால்வளத்துறை ஊழியர்களின் 9 வாரிசுதாரர்களுக்கும், ஆவின் நிறுவன ஊழியர்களின் 12 வாரிசுதாரர்களுக்கும் மொத்தம் 21 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள் இன்று (29.4.2008) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள். மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.உ.மதிவாணன் அவர்கள் முன்னிலையில் பணியாணை வழங்கப்பட்டது.

தற்போது பணிநியமனம் பெற்றுள்ள 21 வாரிசுதாரர்களில் பால்வளத்துறையில் இளநிலை உதவியாளர்களாக 4 வாரிசுதாரர்களும், கால அளவை மஸ்தூர்களாக 5 வாரிசுதாரர்களும் மற்றும் ஆவின் சென்னை நிறுவனத்தில் தொழிற்சாலை உதவியாளர்களாக 12 வாரிசுதாரர்களும் பணியமர்த்தப்படுவார்கள்.

இந்த நிகழ்ச்சியின் போது கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலர் செல்வி லீனா நாயர், இ.ஆ.ப., பால்வள மேம்பாட்டுத்துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு.அபூர்வ வர்மா, இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை இணைச் செயலாளர் திரு.கே.எஸ்.முத்துசாமி, இ.ஆ.ப., பால்வளத்துறை துணை ஆணையர் திரு.எம்.ரவிக்குமார் , ஆவின் இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் என்.சுப்பையன், ஆவின் பொதுமேலாளர் (பணிக்குழு) திரு.கே.காசிநாதன் மற்றும் ஆவின் உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**

‘’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’